ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

मातस्तातः सदनमवनीमित्रपुत्रौ वधूरि-
त्येतान् सर्वान् बहुळदुरितोत्पादका इत्यवेत्य ।
त्यक्त्वा काष्ठारचितवसनोऽबान्धवो यः कपाली
भिक्षुश्चैको विलसति सुखी स्थाणुरन्तस्सभातु ॥

𑌮𑌾𑌤𑌸𑍍𑌤𑌾𑌤𑌃 𑌸𑌦𑌨𑌮𑌵𑌨𑍀𑌮𑌿𑌤𑍍𑌰𑌪𑍁𑌤𑍍𑌰𑍌 𑌵𑌧𑍂𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌾𑌨𑍍
𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌬𑌹𑍁𑌳𑌦𑍁𑌰𑌿𑌤𑍋𑌤𑍍𑌪𑌾𑌦𑌕𑌾 𑌇𑌤𑍍𑌯𑌵𑍇𑌤𑍍𑌯 । 𑌤𑍍𑌯
𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌰𑌚𑌿𑌤𑌵𑌸𑌨𑍋𑌽𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑍋 𑌯𑌃 𑌕𑌪𑌾𑌲𑍀 𑌭𑌿𑌕𑍍𑌷𑍁𑌶𑍍𑌚𑍈
𑌕𑍋 𑌵𑌿𑌲𑌸𑌤𑌿 𑌸𑍁𑌖𑍀 𑌸𑍍𑌥𑌾𑌣𑍁𑌰𑌨𑍍𑌤𑌸𑍍𑌸𑌭𑌾𑌤𑍁 ।

*தாய், தந்தை, வீடு, பூமி, மித்திரன், புத்திரன், பத்நீ என்கிற இவைகள் முதலான ஸகலமான வஸ்துக்களும் அதிகமான துக்கத்திற்குக் காரணமாகின்றனவென்று அறிந்து இவைகளைப் பூராவும் விட்டுவிட்டு திகம்பரராயும் ஒரு பந்துவும் இல்லாதவராயும் மண்டையோட்டைப் பாத்திரமாகக்கொண்டு பிக்ஷாடனம் செய்துகொண்டு யாதொரு பிரபு சுகமாய் விளங்குகிறாரோ ஸகலவிதமான பற்றுதலையும் விலக்கி இரண்டற்றவராய் ஏகஸ்வரூபமாய் எப்பொழுதும் பிரகாசிக்கும் ஸ்தாணு என்கிற அந்த பரமேச்வரரானவர் என்னுடைய மனத்தில் வஸித்துக்கொண்டிருக்கட்டும்.*

மூவுலகங்களுக்கும் அதிபதியாயும் நிக்ரஹாநுக்ரஹ சக்திவாய்ந்தவனுமான ஸ்ரீ பரமேசுவரன்கூட ஸம்ஸாரமென்பது மிகவும் கஷ்டத்தையுண்டு பண்ணக்கூடியது. ஆகையால் அற்பங்கூட அதின் ஸம்மந்தம் நமக்குக் கூடாதென்று கருதி ஸம்ஸார ஸம்பந்தமான ஸகல பதார்த்தங்களையும் அறவேயொழித்து வேறு ஒருவிதமான பற்றுதலுமில்லாமல் தாம் மாத்திரம் ஏகாகியாய் பிக்ஷாவிருத்தியால் சுகமாயிருக்கிறார் என்பதினால் ஸம்ஸாரத்தால் ஏற்படும் கஷ்டம் அதிகமென்றும் ஆகையால்தான் பகவான்கூட அதை விலக்கியிருக்கிறாரென்றும் நம்போன்றவர்களும் எவ்வளவு சிரமம் நேர்ந்தாலும் அதிலிருந்தும் விலஹவேண்டிய வழியை அவசியம் தேடவேண்டுமென்றும் இதினால் அறிவிக்கப்படுகிறது.

உபபத்திராதிபர்.

# லாலாஜியும் மனுஸ்மிருதியும்.

சென்ற வைகாசி-மீ 1உ திங்கட்கிழமை வெளிவந்த மித்திரனில் தென்னிந்தியாவும் லாலாஜியும் என்று தலையங்கமிட்டு 5வது பக்கத்தில் வரையப்பட்ட வியாஸத்தைக் கண்ணுற்றோம். அதில் இப்பொழுது லாலாஜி தென்னிந்தியாவின் மதஸமூகவிஷயங்களைப் பற்றி எழுதியிருக்கிறார். பிராமணர்களைப்பற்றி அவர் எழுதுவதாவது என்று துடங்கி பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதார்களுக்கும் சட்டப்படியான வித்யாஸங்களைஏற்படுத்துவதற்காகத் தென்னிந்தியா பிராமணர்கள் இப்போதைய மனுஸ்மிருதியை அதிகமாகத் திருத்தியிருக்கின்றனரென்று நான் ஸந்தேகிக்க ஆரம்பித்திருக்கிறேன். இப்போதைய மனுஸ்மிருதி தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்டதென்று கருதுகிறேன். மிகுந்த ஸாமர்த்தியமும் புத்திசாலித்தனமும் உள்ளவர்களால் அது தயாரிக்கப்பட்டிருக்கிறது. என்று வரயப்பட்டிருக்கிறது. இங்கு கொஞ்சம் விசாரிக்கவேண்டிய அவச்யமுண்டு.

துவக்கத்தில் லாலாஜி அவர்கள் பிராமணர்கள் இப்போதய மனுஸ்மிருதியை அதிகமாகத் திருத்தியிருக்கின்றனபென்று நான் ஸந்தேஹிக்க ஆரம்பித்திருகிறேன் என்று ஸந்தேகப்பட்டுக்கூறி பிறகு புத்திசாலித்தனமுள்ளவர்களால் அது தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்று ஸந்தேகமில்லாமல் நிச்சயமான தம் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்.

லாலாஜி அவர்கள் மனுஸ்மிருதி என்று இந்து தர்மசாஸ்திரங்களில் முக்கியமான ஒரு நூல் இருப்பதாக அங்கீகரிக்கிறாரா இல்லையாவென்றால் தென்னிந்தியா பிராமணர்கள் இப்போதைய மனுஸ்மிருதியை அதிகமாகத் திருத்தியிருக்கின்றனரென்று அவர்கள் கூறியிருப்பதைக்கொண்டு அதிலும் அதிகமாகத் திருத்தி

யிருக்கின்றனர் என்று சொல்வதாலும் இக்காலத்தியவர்கள் முன்னிருந்த மனுஸ்மிருதியில் தங்களுக்கு அனுகூலமான பல விஷயங்களைச் சேர்த்திருக்கிறார்கள் என்றும் இதற்கு முன்னும் ஒரு மனுஸ்மிருதியுண்டு. ஆனால் அது இவ்விதமில்லையென்றும் இவர்கள் கருதுவதாகத் தெரிகின்றது. முன்னிருந்த மனுஸ்மிருதி வேறு. தற்காலமிருக்கும் மனுஸ்மிருதி வேறு என்பதை இவர்கள் எந்த ஆதாரத்தைக்கொண்டு சொல்லுகிறார்களென்று தெரியவில்லை. இவர்களபிப்பிராயப்படி முற்காலத்திலிருந்த மனுஸ்மிருதி சுத்தமானது. தற்காலமிருப்பது ஸரியல்லவென்பதை இவர்களால் நிரூபிக்கமுடியுமா? முற்காலத்திய சுத்தமான மனுஸ்மிருதி இப்பொழுதுமிருக்கிறதா? இல்லையா? இருந்தால் எங்கே இருக்கிறது? அச்சுபுஸ்தகமா அல்லது கையால் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகளிலா எவ்விதமிருந்தாலும் அதை நன்றாக எடுத்துக் காட்டி இந்தக்கம்பேனியிலச்சிட்ட அல்லது இன்ன லைபரியிலிருக்கும் ஓலைப்புஸ்தகத்தில் சுத்த மனுஸ்மிருதியிருக்கிறது. அதற்கும் தற்காலம் அச்சிட்டு வெளிவந்திருக்கும் மனுஸ்மிருதி புஸ்தகத்திற்கும் இந்தெந்த விடங்களில் பாடங்களை மாற்றியிருக்கிறார்கள். அல்லது எடுத்துவிட்டார்கள் அல்லது அதிகம் சேர்த்திருக்கிறார்களென்று ஏன் ஸ்பஷ்டமாய் பலரும் நன்கறியும்படி வெளியிட்டிருக்கக்கூடாது. அவ்வித சுத்தமான பிரதியே இப்பொழுதில்லை என்றால் அவ்விதம் தற்காலமிருப்பதற்கு மாறுதலாக சுத்தஸ்மிருதி ஒன்று இருந்ததென்பதை இவர்கள் எப்படிக் கண்டுபிடித்தார்கள். தமது ஞானதிருஷ்டியாலா அல்லது மஹாகுருக்களுடைய உபதேசத்தாலா எவ்விதம் இவர்கள் அறிந்திருந்தாலும் அதைப் பொதுவான வார்த்தைகளால் சொல்லாமல் பலரும் சங்கையின்றி இவர்களபிப்பிராயத்தை யங்கீகரிக்கும்படி ஏன் தெரிவிக்கக்கூடாது? இவர்கள் கருதும் சுத்தமான மனுஸ்மிருதியை மாற்றி எத்துணைவருஷகாலமிருக்கலாமென்பதையும் அறிவிக்கவில்லை. மேலும் தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்டதென்று கருதுகிறேன் என்று கூறப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவில் பிராமணர்களுள் பல வகுப்பினர்களுமிருப்பதால் அவர்களுள் எவர் இந்த மனுஸ்மிருதியை இவ்விதம் தயார்செய்தவர். பொதுவாய் பிராமணர்தானென்றால் அவர் எதற்காக இவ்விதம் தயாரிக்கவேண்டும். தம் ஜாதிக்குப் பெருமை வேண்டுமென்கிற கெட்

டெண்ணம்தான் என்று இவர்கள் சொல்லவேண்டும். மனுஸ்மிருதியை அடிமுதல் நன்கு கவனித்தால் பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நிர்ப்பந்தம்தான் அதிகமாக இருக்கிறது. இதரஜாதிகளுக்கு மிகவும் குறைவாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. முதலாவது பிர்மசர்யாச்ரமத்தில் குருகுலவாஸமும் பிக்ஷாஹாரமும் மற்றும் கடுமையான பல நியமங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. (தொடரும்)

உபபத்ரிரா திபர்

---

# காலத்தின்கதி.

(211-வது பக்கத் தொடர்ச்சி)

ஆரியர்களே! இந்த தசையில் ஏதோ நாம் வேண்டும் வேண்டுமென்று தீவிரமாய் விரும்புகிற ஸ்வாராஜ்யத்தை நாம் அடைய முடியுமா. ராஜாங்கத்தார் கொடுக்க மறுப்பதாய் வீண்புகார் செய்வது முற்றிலும் தவறு. அவர்கள் நமக்குச் சொல்லாதது போல் சொல்லிக் காட்டுகிற திவ்யவாக்கியத்தை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பாருங்கள். ராஜாங்கத்தில் சொல்வதென்ன "உங்களுக்குள் பல வேற்றுமைகளிருப்பதால் நீங்கள் ஸ்வாராஜ்யம் அனுபவிக்க அர்கர்களல்ல. என்பதே. இதில் தவறுதல் உண்டா. இதன் அர்த்தத்தை நன்கு ஊன்றிப்பார்க்காமல் நாம் ஒற்றுமையென்றால் ஒருவனையொருவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு செல்ல வேண்டும். உட்காரும்போது ஒருவன் மடிமீதுமற்றொருவன் உட்கார வேண்டும். ஒருவன் உண்பதைப் பிடுங்கி நாமும் வாய் வைத்து சாப்பிடவேண்டும். இதுதான் ஒற்றுமை என்று மூலைக்கு மூலை கூக்குரலிட ஆரம்பித்தோம். இதைப் பார்த்ததும் சபாஷ் ஒற்றுமைக்கு அர்த்தம் இதுவா கருத்து. இவ்விதம் எந்த தேசத்திலிருக்கிறது. இதுகூடத் தெரிந்துகொள்ளவில்லையே. இவர்களுக்கு ஸ்வாதந்திரியம் எவ்விதம் ஏற்கும் என்று தயங்குகின்றனர். இவ்விதமே நாம் மேற்போனால் வீணாய் ராஜவிரோதமும் ஒருவருக்கொருவர் உட்சண்டையும் வலுத்துக் கூடிய சீக்கிரம் நாம் இன்னும் பாதாளம் போய்விடுவோம்.

நம்மிடம் ஒற்றுமையில்லை என்பதைக் காட்ட ஸமீபத்தில் சென்னையில் நடந்தேறிய பல கூட்டங்களின் நடவடிக்கையைப் பற்றி 12-1-28 வியாழக்கிழமை மித்திரனில் 3-ம்பக்கத்தில் காங்கிரஸ் நகரில் நான் கண்டகாக்ஷி சீதாநாதன் எழுதியது என்ற வியாஸத்திலுள்ளதை இங்கு வரைகின்றேன். அதிலிருந்து நம் புத்தி சாலித்தனமும் ஒற்றுமையும் நன்கு விளங்கும்.

காங்கிரஸ் மகாசபையானது குணத்திலும், நடத்தையிலும், மனப்பான்மையிலும், மிகுந்த வித்யாஸங்களையுடைய கணக்கற்ற மக்களைப்பெற்று விட்டதாய் போலிருக்கின்றது. காங்கிரஸ்சபையை ஒட்டி நடந்த கணக்கற்ற மகாநாடுகளே நான் கூறுவதை மெய்ப்பிக்கப் போதிய அத்தாக்ஷியாகும். ஒவ்வொரு மகவும் தனக்கே விசேஷ சலுகையும் பிராதான்யமும் கொடுக்கப்படவேண்டுமெனத்தாயிடம் போராடுவது போல ஒவ்வொரு கொள்கையை உடைய கக்ஷியும் கூறுகின்றன என்று இம்மாதிரி 17-மஹாநாடு அங்கு நடந்ததாயும் அதன் தன் நடவடிக்கையைக் கவனித்ததாயும் விஸ்தாரமாய் இருப்பதை நண்பர் அப்பத்திரிகையிலே தெரிந்து கொள்ளலாம்- இம்மட்டில் நாம் கவனிப்பாம்.

காங்கிரஸ் மகாஸபையைப் பெரியதாயாகவும்அநேகமகவைப் பெற்றதாயும் கூறுவது பெருமையே. ஆனல் பெற்றபிள்ளைகள்ஒவ்வொருவரும் பல வேறு அபிப்பிராயமுடையவர்களென்றும்தனக்குத் தான் பிராதான்யத்தைக் கொடுக்கவேண்டுமென்றுசச்சரவு செய்வதாயும் சொல்கிறார், இது காங்கிரஸ் மகாஸபைக்குமிகவும் இழிவைக் கொடுக்காதாபாருங்கள். ஒரு தாயின் பல பிள்ளைகள் பல வேறு அபிப்பிராயமுள்ளவர்களாயின் யாரை அவள் ஸமாதானம் செய்வாள். ஒன்றுக்கொன்று முறண்பட்டு அடித்துக் கொண்டு தன் லாபத்தையே இழந்துவிடுவதோடு தாயையும் சந்தியில் இழுத்து விட்டுவிடுவார்கள். அத்தாயையும் உலகிலுள்ளோர் இகழமாட்டார்களா. இப்படிப் பிள்ளைகளைப் பெறுவதைக் காட்டிலும் என்று ஆரம்பித்து எழுத முடியாதபடிபேசமாட்டார்களா. இருக்கட்டும் இனி ஒவ்வொரு ஸபையின் தீர்மானத்தைகவனிப்பாம்.

## காங்கிரஸ் ஸபையின் தீர்மானம்

1. காங்கிரஸ் பந்தலைச் சுற்றி தீண்டாமைப் பேயை ஒட்டுங்கள் என்று எழுதித் தொங்கவிடப்பட்டிருந்தது இதுதான் காங்

கிரஸ்ஸின் முக்கியக்கொள்கை. தீண்டாமை ஒழித்தால் அன்றே ஸ்வராஜ்யமென்று அதில் உள்ள புத்திசாலிகளின் கொள்கை.

2. ஹிந்திமகாநாடு, இதில்பிரஸங்கிகளின் கொள்கை இந்தியா முழுவதிலும் உள்ள ஜனங்கள் ஹிந்தியை எழுதவும் படிக்கவும் தெரிந்து கொள்ளுகிறவரை இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கிடைக்காது என்பதே

3. ஸ்தலஸ்தாபன மகாநாடு கிராமப் பஞ்சாயத்துக்களும் ஜில்லா தாலூகா போர்டுகளும் ஸ்வராஜ்யத்திற்கு ஆணிவேர்களென்றும் அவைகள் பலம் பெருகிற வரையில் ஸ்வராஜ்யம் பகற்கனவென்பது தீர்மானம்.

4. நீல் சிலை சத்தியாக்கிரகக்கூட்டமாம் அவர்கள் நீல்சிலை போராட்டத்திலிருந்தே ஸ்வராஜ்யத்தைப் பெற நமக்குள் யோக்யதை வெளிப்பட வேண்டுமென்றும் நீல் சிலையானது பொடிபண்ணப்பட்டு மவுண்ட்ரோட்டில் மண்ணோடுமண்ணாகச் சேர்ந்து பறக்கிறவரையில் ஸ்வராஜ்யம் கிடைக்காதென்று பேசினார்கள்.

5. வாலண்டியர் மகாநாடு. அங்கு இந்தியாவில் திடசரீரர்களாக இருக்கும் ஆணும் பெண்ணும் தேசத்தின் பொருட்டு இச்சா ஸேவகர்களாக உழைக்கவும், தியாகங்கள்செய்யவும்முன் வருகிற வரையில் ஸ்வராஜ்யம் கிடைப்பதென்பது கஷ்டமான காரியமென்றும் அதவா ஒரு சமயம் கிடைத்தாலும் அதைக்காப்பாற்றிக்கொள்ள முடியாமற் போகுமென்றும் தீர்மானம் செய்தனர்.

6. யுவர்கள் மகாநாட்டிலும் தீர்மானம் முன் போன்றதே.

---

M. N, சுப்பிரமண்யசாஸ்திரியள்.

## தேவக்கோட்டையில் சங்கரஜயந்தி மஹோத்ஸவம்!

இந்நகர் வெள்ளையநாரணி அககிரஹாரத்தில் சங்கரதாஸன் மகா-ள-ஸ்ரீ நாகசாமி அய்யாவர்கள் கிருஹத்தில் ஸ்ரீமதாசார்யானுக்கிரத்தை முன்னிட்டுப் பிரதி வருஷம் நடைபெற்று வருகிற ஸ்ரீ சங்கரஜயந்திமஹோத்ஸவமானது இவ்வருஷமும் சித்திரைமீ 12உ பௌமவாரம் அன்று முதல் ஜனோத்ஸவமாக ஆரம்பித்து

ஐந்து நாள் நடைபெற்றது. ஐந்தாவது தினம் காலையில் மகன்னியாஸபூர்வகமாய் ஏகாதசருத்திராபிஷேகமும் அநேக ஸஹஸ்ரார்ச்சனைகளும் ஆசார்யாவதாரகதாப் பிரசங்கமும சுமார் 500 பேருக்குக் குறையாமல் பிராமண சமாராதனையும் மிக விமரிசையாய் நடைபெற்றன. ஒவ்வொருநாளும் காலையில் 8-மணி முதல் 12-மணி வரையில் மாலை 7-மணி முதல் 9-மணி வரையில் மூன்று வேதபாராயணங்களும் தாமர புஷ்பங்களால் 29-ஸஹஸ்ரநாமார்ச்சனைகளும் நடைபெற்றன. தவிரவும் ஒவ்வொரு நாளும் மாலை 4-மணிக்கு மேல் கோவிலூர் வித்யாசாலை உபாத்தியாயர்பிரம்மஸ்ரீ ஆங்கரை ரங்கசாமி சாஸ்திரிகள் தேவக்கோட்டை பிரம்மஸ்ரீ என். கிருஷ்ணசாஸ்திரிகளும், மன்னார்குடி பிரம்மஸ்ரீ பாட்டாசாரியஸ்வாமிகளாலும், உபன்யாசங்களும் மாலை 9-மணிக்கு மேல் அனேக ஸங்கீத வித்வான்களால் சங்கீதக் கச்சேரிகளும் கதாகாலக்ஷேபங்களும் நடந்து முடிவு தினமான சனிக்கிழமை மாலை 8-மணிக்குத் தாமரை புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட சிபிகையில் ஆசார்ய ஊர்வலமும் நடந்தது. மறுநாள் விடாயாத்தி உத்ஸவம் நடத்த மாலை 3-மணிக்கு வேதபாராயணத்துக்காகவும், பாஷ்யபாராயணத்துக்காகவும் வந்திருந்தபண்டிதர்கள்சுமார் 50-பேருக்கு யதாசக்தியான சம்மானமும் பக்திச்ரத்தையுடன் ஸ்ரீ சங்கரதாஸ் நாகசாமி அய்யரால் செய்யப்பெற்றது.

நா. கிருஷ்ணசாஸ்திரி.

---

## விவாஹவயது நிர்ணய மசோதா கண்டனம்.

ஸ்ரீ மாத்வசபையின் ஆதரவில் இம்மசோதா நன்றாகக் கண்டிக்கப்பட்டு கும்பகோணம் மாத்வஸமூஹத்தாரின் கையொப்பமிட்ட இரண்டு விண்ணப்பங்கள் கனம் வைஸ்ராய் அவர்களுக்கும் சென்னை கவர்னர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதன் சாராம்சமாவது பின்வருமாறு:—

"1. விவாஹம் என்பது சாஸ்திரீய ஸம்ஸ்காரம் போகத்தை மாத்திரம் கருதி ஏற்பட்டதல்ல. மூலப்ரமாணமான வேதங்களால் விதிக்கப்பட்டது. ஸர்க்கார் ஹிந்து சட்டத்தில் விவரித்திருக்கிறபடி மூன்று காரணங்களால் ருதுகாலத்திற்கு முன்னரே

தான் விவாஹம் செய்யப்படவேண்டும். விவாஹத்தினுல் ஒரு சிறுமி தன்கணவனின் குடும்பத்தோடுகுடும்பமாக இணைக்கப்படுகிறுள். இவ்வித இணைப்பிற்கு கெட்ட எண்ணங்கள் குடிகொள்ளாத மனுேபாவமுடைய பால்ய வயதிலேயே (8-வயதிலேயே) செய்யப்படும் விவாஹம் இன்றியமையாதது.

ருதுவுக்கு முன்னரே விவாஹத்தைக் கைக்கொண்டிருக்கும் பிராமணர்கள் ஜனத்தொகையில் நூற்றுக்கு மூன்றுக்கும் குறைவாகவே இருப்பார்கள். ஆகையால் இதைச் சட்டம் செய்ய யாதொரு அவசியமுமில்லை. இச்சட்டத்தால் எதிர்பார்க்கப்படும் நன்மைகளாகக் கருதப்படுபவன மிகவும் பரிஹஸிக்கத் தக்கவை என்பது ஆக்ஷேபமில்லாத (Staistris) இன் படிப்பினையால் நன்கு விளங்கும். ஸென்சஸ் கணக்கில் ஸ்திரீகள்தான் ஆடவர்களைவிட அதிகம் என்பது ஸ்பஷ்டம. ஆகையால் கணவனில்லாமல் சிறுமிகள் தவித்தால் என்ன ? விதவைகளாய் தவித்தாலென்ன ? எல்லாம்தெய்வச் செயல் !

நியாய விரோதமான இம்மசோதா சட்டமாக்கப்படின் பிரெஞ்சு முதலிய இலாகாக்களுக்கு விவாஹ நிமித்தம் போகவேண்டியிருப்பதுடன் இச்சமயம் இந்தியர்களின் ஆசாரமான அமைதியுள்ள வாழ்வுக்கே ஓர் இடையூறாகவிருக்கும். ஆகையால் கனம் துரையவர்கள் இதை நிராகரிக்கவேண்டும் என்று பிரார்த்தனை.

ஸ்ரீ மாத்வசபா }
கும்பகோணம் }

M. ராமராவ்,
காரியதரிசி,

# ஜீவன் முக்தஸ்வரூபம்.

உலகத்தில் ஸகல ஜீவப்பிராணிகளும் சுகத்தை அடைவதற்கே ஆசைப்படுவதை அறிகிறேம். ஒருப் பிராணியும் அசுகத்தைப்பற்றி சிந்திக்கிறதுமில்லை. அசுகமும் எப்படி நேரிடுகிறதென்று விசாரிக்கிறதுமில்லை. ஜீவன் முக்தஸ்வரூப விசாரணையில் சுகா சுக விசாரணை பூர்த்தியாக அடங்கியிருக்கிறது. விசேஷமாய் ஜீவர்கள் நிலைமையை யோசித்துப்பார்க்குமளவில் சில ஜீவர்கள் சுகிகளாகவும் சில ஜீவர்கள் குரூரமானவியாதிகளால் அல்லது வெகு தரித்திர நிலைமையாய் பீடிக்கப்பட்டு சதா அசுகிக

ளாய் தங்கள் ஆயுள் வரையில் கஷ்டப்படுவதை நிதர்சனமாய்ப் பார்க்கிறோம். இவ்வித வித்யாஸ நிலைமைகளுக்குக் காரணம் அதாவது ஒவ்வொரு ஜீவனும் அனுதியான அவித்யா வாசனை யால் கட்டுப்பட்டு புண்ய பாப மிச்ர கர்மங்களின் ஹேதுவால் பலவித பலன்களை இந்த ஜன்மாவிலும் இனி ஜன்மஜன்மாந்திரத் திலும் பலப்பிராப்தியை அடையவேண்டியதாக இருக்கிறது: இந்த மாதிரியான காரணத்துக்கு அனுதியான வேதாகமங்கள் ப்ரமாணம். இதை வேதத்தில் ப்ரமாணபுத்தியுடையவர்கள் ஆக்ஷேபிக்கிறதில்லை. இதர நாஸ்திகர்களிடத்தில் நமக்கு ஸம் வாதமில்லை. வேதமூலமாய் விசாரணை செய்தால் ஜீவன் முக்த ஸ்வரூபம் நம் மனசுக்கு நன்ருய் விளங்கும். ஆனதால் ஜீவன் முக்த ஸ்வரூபத்தை நன்கு அறிய வேண்டியவர்கள் நம் பிராசீன வேதத்தின் உள் கருத்தைக் கண்டுபிடித்து அதன்படியே தினசரி நடந்துகொண்டுவந்தால் இவ்வுலகத்திலே ஜீவன் முக்தர்களாயும் சதா மனஸ்ஸந்துஷ்டியாகவும் காலம் கழித்துப் பிறகும் லோகா ந்திரங்களில் நமது சூக்ஷ்ம சரீரம் தட்டுக்கிட்டு அலைந்து கேவல மான ஸ்தூல சரீரப்பற்றில்லாமல் நிறந்தரமான சுகப்பிராப்தியை அடைவது நிச்சயம்.

ஜீவன் முக்தர்கள் மனோநிலையைச் சற்று ஊகித்துப்பார்க்கு மளவில் அவர்களுக்கும் இதர மனுஷ்யர்களுக்கும் தாரதன்மை ஸ்பஷ்டமாய் தெரியவரும். ஜீவன் முக்தர்கள் தங்கள் மன ஆராய்ச்சி முழுமையும் செய்தவர்களாகையால் அவர்கள் செய்யும் கார்யங்களெல்லாம் தர்மாதர்ம விவேசன சம்பந்தமுடையவைக ளாகவே இருக்கும். ஜீவன் முக்தர்கள் வேதத்தின் உள் கருத் தைச்சீர்தூக்கிப் பார்ப்பவர்கள் விசேஷமாய் வேதம்செய்யும் ஆக் ஞைகளெல்லாம் ஒரு பிரபுவின் கட்டளைகள் போலிருக்கும். கட் டளைப்படி சேவகன் நடக்கவேண்டியதே ஒழிய எஜமானன் உத் திரவு சரி பிசகு என்று ஆக்ஷேபிக்க இடமில்லை, எஜமானன் கட்டளைப்படி நடக்காத சேவகன் கதி நாம் சொல்லாமலே விளங் கும், ஆகவே ஜீவன் முக்தர்கள் ஜன்மாந்திரங்களில் அனுஷ்டித்த புண்ய கர்மவிசேஷத்தால் இந்தப்பஞ்சபூதங்களடங்கியசரீரத்தில் அஹம் என்கிற பதார்த்தம் என்ன? அதன் ஸ்வரூபமென்ன? அதன் கத்யந்திரம் எப்படி? அந்த 'அஹம்' என்கிற விஷயத்

தைப்பற்றி நம் முன்னோர்கள் விசாரித்திருக்கிறார்களா? எம்மாதிரியான விசாரணை செய்திருக்கிறார்கள்? அவ்வித விசாரணையால் ஜீவர்களுக்கு ஏதாகிலும்சிரேயஸ் உண்டா? இம்மாதிரியான சித்த விருத்தியுடன் ஜீவன்முக்தர்களிருப்பார்கள். ஜீவன்முக்தர்களுக்கு விசேஷ சந்தோஷம் உண்டானாலும் சரி, துக்கம்நேரிட்டாலும் சரி, எல்லாம் பிராப்தமாய் லபித்ததென்று உதசீனபுத்தித் தன்மையுடன் ஜகத்தில் ஜனங்களுடன் கூடி வாழ்வார்கள். இதரர்களைப்போல் துக்ககாலத்தில் ஹோ ஹோவென்று புலம்பவும் மாட்டார்கள் சந்தோஷகாலத்தில் கர்வங்கொண்டும் பேசமாட்டார்கள். ஜீவன் முக்தர்களைத் தவிற இதறர்களுக்கு இம்மாதிரியான மனோ நிலை இருப்பது அசம்பாவிதம். சாமான்யர்கள் ஜீவன் முக்தர்களைப் போல் நடிப்பதற்கும் முடியாத விஷயம். உண்மையான பரிபக்குவமும் ஞானபலமுமிருந்தால் ஒழிய ஜீவன் முக்தஸ்வரூப நிலைமையை அடைவது முடியாதகாரியம். ஜீவன் முக்தாள் நிலைமை சர்வஸாதரணமாய் எவரும்அடையலாம். ஆனால் ப்ரயத்தினம் தர்மமார்க்கமாய் இருக்கவேணும். ஸ்தூலசரீரத்திலிருக்கிற அஹம் புத்தியைப் பிரதிதினமும் தர்மானுஷ்டான க்ரமத்தால் விலக்கிக்கொள்வது சுலபகாரியம். தனுர்மாஸ காலத்தில் காலையில் குளிர் பனி உபத்திரவத்தால் சரீரத்தை மூடிக்கொண்டும் போஷித்துக்கொண்டும் உரங்கினால் சரீரத்தில் அஹம் புத்தி ஒழிவதெப்படி தர்மானுஷ்டான க்ரமப்படி தனுர்மாஸம் என்பது விசேஷப்புண்யகாலம். அதை அறிந்தும் அஹம் பதார்த்தம் சரீரத்தைத் தவிர வேறு என்பதாக அனுபவித்தும்ப்ராதக்காலத்தில் சரீர சுத்தியை உத்தேசித்து சௌச ஸ்நானாதிகளைச்செய்தவுடன் சூக்ஷ்மசரீர ஆராய்ச்சி சம்பந்தமாய் பக்தியோக மார்க்கப்படியானாதிகளை மூர்த்தி விசேஷங்களிலோ அல்லது ஞானமார்க்கப்படி அவித்யா சரீரமாகிய மாயா சரீரத்தைக்கொஞ்சம் கொஞ்சமாக இடித்துக்கொண்டும் வருவது சாத்யமான கார்யமேதவிரஅசாத்யம் ஒன்றுமில்லை.

எஸ், கிருஷ்ணமூர்த்திஅய்யர்,
மேலக்காவேரி.

---

## ஜலத்தின் சுத்தியும் அதை உபயோகிக்கும் விதமும்.

ஜலமானது ஜீவாதார வஸ்துக்களில் முதன்மையானதால் அதை ஒவ்வொருவரும் சுத்தமாய் வைத்துக் கொள்ளவேணும்

என்றும்அதை எவ்விதத்திலும் அசுத்தப்படுத் தக்கூடாதென்றும் அதைப்பக்திய விதிகளைத் தெறிந்தவரையில் எழுதியிருக்கிறேன். விசேஷ விதிகளை நண்பர்களிடமிருந்து கேழ்க்க ஆவலுடையவனாகவும் இருக்கிறேன்.

ஜலமானது ஈசுவரனால் முதல் முதலில் ஸ்ருஷ்டிக்கப்பட்டது ‘‘ஜலவனவஸஜூராதிள’’ அது ஸமுத்திரமென்றும், நதிகளென்றும், ஏறிகளென்றும், குளங்களென்றும், கிணருகளென்றும், ஊற்றுகளென்றும், பலவகை உறுவத்துடன் ஆங்காங்கிருந்து அந்தந்த பூஸாரங்களையும் நிறங்களையும் அடைந்து பிராணிகளுக்கு ஜீவாதாரத்திற்கு உபயோகமாகி வருகிறது, இதற்கு நியாயம் ரகுவம்சம், தேவதைகள் விஷ்ணுவைஸ்தோத்திரம் செய்கையில்

रसान्तराण्येकरसं यथा दिव्यं पयोऽश्नुते ।
देशे देशे गुणेष्वेव अवस्तांत्वमविक्रियः ॥

ரஸாந்தராண்யேகரஸம் யதா திவ்யம் பயோऽஶ்நுதே ।
தேஶே தேஶே குணேஷ்வேவ அவஸ்தாம்ஸ்த்வமவிக்ரிய: ॥

வானத்திலிருந்து அமிருத ரூபமான ஜலமானது மழை என்ற வியாஜத்தால் பூமியில் வேறு வேறு ஸ்தானத்தை அடைந்து வேறு வேறு ருசிகளையும், குணங்களையும், அடைகிறது என்பது நிச்சயம். ஜலமானது அமிருதமே ஒழிய வேறில்லை. அந்த ஜலத்தை

पयः कीलालममृतं जीवनं भुवनं वनम् ।

பய: கீலாலமம்ருதம் ஜீவநம் புவநம் வநம் ।

குடிக்கத்தக்க வஸ்துக்களில் உத்தமமானதென்றும், கீலாலம் ஸகல அக்னிஜ்வாலைகளையும் தடுக்கிறதென்றும் அமிருதம், இதை அருந்தினால் மரணம் கிடையாதென்றும் ஜீவனம் இதனால் ஸகலப் பிராணிகளும் ஜீவிக்கிறார்களென்றும், புவனம் இதனால் பூமியில் ஸகலமும் உண்டாகிறதென்றும், வனம் எல்லா வஸ்துக்களிலும், ரஸரூபமாய் கலந்திருக்கிறதென்றும், இன்னும் இப்படி எத்தனையோ அருமையான பெயரிட்டிருக்கிறார்கள்.

வேதமானது காணக்கூடியவை முழுவதும் ஜலமென்றும், பிரபஞ்சத்தில் உத்பத்தியாகும் வஸ்துக்கள் யாவும் ஜலமென்றும்

பிராணன் ஜெலமென்றும்ஸகலப்பிராணிகளும் ஜலமென்றும் அன்னம் முதலிய ஆகார வஸ்துக்கள் ஜலமென்றும் ஸகல ஒளியும், ஸகலதேவதைகளும், பதினறுலோகங்களும் ஜலமே என்றும்இன்னும் எத்தனையோ விதமாய் முறையிடுகிறது. கேவலம் ஜலத்தையே உட்கொண்டு எத்தனையோ மஹான்கள் அடையமுடியாத ஸித்திகளை அடைந்திருக்கிருர்கள்.

பாரத अब्भक्षा वायुभक्षाश्च அப்ப⁴க்ஷா வாயுப⁴க்ஷாஶ்ச

என்றிருக்கிறது. பூர்வம் தக்ஷப்பிரஜாபதி ஈசுவரனைத் துதிக்கையில்

यस्य केशेषु जीमूता नद्यस्सर्वाङ्गसन्धिषु ।
कुक्षौ समुद्राश्चत्वारः तस्मै तोयात्मने नमः ॥

யஸ்ய கேஶேஷு ஜீமூதா நத்³யஸ்ஸர்வாங்க³ஸந்தி⁴ஷு ।
குக்ஷௌ ஸமுத்³ராஶ்சத்வார꞉ தஸ்மை தோயாத்மனே நம꞉ ॥

யாருடைய ஜடையில் கெங்கையும் ஸர்வாங்க ஸந்திகளில் நதிகளும் வயத்தில் ஸமுத்திரங்கள் நான்கும் உண்டோ அப்பேர்க்கொத்த ஜலமூர்த்தியை நமஸ்கரிக்கிறேன் என்றுர். இதனுல் ஜலமானது ஈசுவரத்தன்மை பொருந்தியது. கவிகுலதிலகனுன காளிதாசர் சாகுந்தல நாடக மங்கள சுலோகத்தில் ஈசுவரனை அஷ்டமூர்த்தி ஸ்வரூபமாக ஸ்தோத்திரம் செய்திருக்கிருர். ஜலமானது அஷ்டமூர்த்தியம்சத்தில் ஒன்று மூகபஞ்சாசதியில் அம்பாளை ஸ்துதி செய்கையில்

धरणिमयीं तरणिमयीं गगनदहनपवनहोतृमयीम् ।
अम्बुमयीमिन्दुमयीमम्बामनुकम्पमादिमामीक्षे ॥

த⁴ரணிமயீம் தரணிமயீம் க³க³நத³ஹந பவநஹோத்ருமயீம் ।
அம்பு³மயீமிந்து³மயீமம்பா³மநுகம்பமாதி³மாமீக்ஷே ॥

பூமி, சூரியன், ஆகாயம், அக்னி, வாயு, எஜமான், ஜலம், சந்திரன் இப்படி அஷ்டமூர்த்தி ஸ்வரூபிணியென்று மூகாள் சொல்லியிருக்கிருர்கள். இதில் ஜலமானது ஈசுவரத்தன்மை பொருந்தியது

(இனி மேல் ஜலத்தின் சுத்தி வகைகளைச் சொல்லுவோம்.)

(தொடரும்.)

பனயப்பட்டி வெங்கடேசய்யர்,